சொன்னதை அந்த மாவட்ட உறுப்பினர் என்ற முறையில் நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அது எப்போது ஆரம்பிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, பக்கத்தில் இருக்கிற திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினருடைய மனக் குறையை சம்பாதித்துக் கொள்ளாமல், திரு. கிட்டப்பா அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க தனியாக ஒரு பிரிவை அமைக்க அரசு யோசனை செய்யும்.

செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஒன்றியங்களில் வளர்ச்சிப் பணிகள்.

*வினா எண் 90—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டம் செய்யாறு மற்றும் அனுக்காவூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளை ஏனைய ஊராட்சி ஒன்றியங்கள் போல ஒருங்கிணைந்த கிராமப்புற அபிவிருத்தி திட்டம் அல்லது சிறு-விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும் இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் 2-10-80 முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வத்தலக்குண்டு ஒன்றியத்தில் சாலைப் பணிகள்.

*வினா எண் 91—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி வத்தலக்குண்டு யூனியன் ராமநாயக்கன்பட்டி—ரெங்கப்பநாயக்கன்பட்டியை இணைத்து வைகையின் குறுக்கே பாலம் அமைத்து புள்ளிமான்கோம்பை வழியாக ஆண்டிப்பட்டிக்கு சாலை அமைக்கும் திட்டம் ஏதும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது வேலை ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை,

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9.30)

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மலைப் பகுதியிலே வாழக்கூடிய மக்களின் விளைபொருட்களை வெளியே எடுத்துச் செல்வதற்காக அங்கே ஒரு பாலம் கட்டவேண்டும் என்ற திட்டம் அரசுக்கு அனுப்பப் பட்டது. அதனுடைய மதிப்பீடு என்ன? இந்தத் திட்டம் அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அன் எகனாமிகல் (uneconomical) என்றிருந்தாலும் கூட இந்தத் திட்டத்தை முடித்து விட்ட பிறகு டோல்கேட் மூலமாக அரசு செலவழித்த பணத்தை வசூல் செய்து கொள்ளலாம். ஆகவே அரசாங்கம் இதற்கு வழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர் களே, வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவதும் புள்ளிமான் கோம்பை வழியாக சாலை அமைப்பதும் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதற்காக ஏற்கெனவே 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இப்போது இருக்கின்ற நிதி நிலைக்கேற்ப தான் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். ஆகவே வரும் காலத்தில் வேறு சாலைகள் அமைக்கும் திட்டங்களை செயல்படுத்தும்போது அரசின் நிதிநிலைக்கேற்ப அந்தப் பகுதியின் முக்கியத் துவத்தையும் கருத்தில் கொண்டு கண்டிப்பாக பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, எங்கள் பகுதியிலே நாங்கள் நிறைய கரும்பு உற்பத்தி செய்து மில்களுக்கு அனுப்புகிறோம். அந்தப் பகுதியிலே இரண்டு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆகவே அதன் மூலம் கிடைக்கின்ற செஸ் பணம் நிறைய இருக்கின்றது. ஆகவே அந்தப் பணத்தின் மூலமாகவாவது இந்தப் பாலத்தை விரைவிலே கட்டுவதற்குரிய வகையிலே அரசு பரிசீலிக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, அது தகுந்த துறையின் மூலமாக பரிசீலிக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, இப்போது பாலங்கள் என்ற தலைப்பில் எங்கு பார்த்தாலும் 15 இலட்சம் 20 இலட்சம் என்ற அளவில் மதப்பீடு தயார் செய்து அந்த மதிப்பீடுகள் பரிசீலனையில் இருக்கின்றன என்று கடந்த மூன்று ஆண்டுகாலமாக அமைச்சரவர்கள் சொல்லிக் கொண்டு வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலங்கள் என்ற தலைப்பில் சென்றால் நேரம் அதிகமாகிவிடும். உட்காருங்கள்.